மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சார போர்டு கடன் எழுப்புவதுபற்றிய கேள்வி இது. என்றாலும், கனம் உறுப்பினர் கூறியபடி அநியாயமாக வாங்குகிறார்களா அல்லது நியாயமாக வாங்குகிறார்களா என்பதை அதனுடைய தன்மையைப்பொறுத்து கவனிக்க வேண்டும். முறைக்கு மீறி வாங்குகிறார்கள் என்றால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்யலாம். கட்டணங்கள் ஒரு அடிப்படையின் மீதுதான் விதிக்கப்படுகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் கூறிய அடிப்படையில் ஆராயப்பட்டு அத்தகைய முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி தனியாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், விவரம் கொடுக்கலாம்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : நேரம் குறைவாக உள்ளது. இந்தக் கேள்வி மின்சார போர்டு எழுப்புகின்ற கடன் பற்றியது. ஆகவே, துணைக் கேள்விகள் அதைப்பற்றி இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். கருப்பையா : மின்சார நிறுவனங்கள் தேசியமயமாக்கப்படும் என்று சொல்லியும் திருச்சி சவுத் மெட்ராஸ் கார்ப்பரேஷனை இன்னும் அரசாங்கம் ஏற்காதது ஏன் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது மூலக்கேள்விக்கு தொடர்பு இல்லாத உப கேள்வி. இருந்தாலும் பதில் சொல்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் நிதிநிலை அறிக்கையிலேயே "படிப்படியாக எடுத்துக்கொள்ள முயற்சி செய்யப்படும், முதல் கட்டமாக இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை ஆணையாளர்

'*150 வினா.—**திரு. கெ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசின் தற்போதைய அறநிலைய பாதுகாப்பு கமிஷனர் அவர்கள் எத்தனை ஆண்டுகளாக தொடர்ந்து இந்தப் பதவி வகித்து வருகிறார் ?

(இ) அவரது தற்போதைய வயது என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழக அரசின் தற்போதைய இந்து சமய, அறக்கட்டளை ஆட்சித்துறை ஆணையாளர் கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து இந்தப் பதவி வகித்து வருகிறார்.

(இ) அவரது தற்போதைய வயது ஐம்பத்தைந்து.

திரு. கெ. இர. ஞானசம்பந்தன் : இந்த அறநிலையப் பாதுகாப்புத் துறை ரொம்ப நன்றாக இல்லை, பலவிதத்தில் சரியாக இல்லை என்று பொதுமக்கள் மத்தியிலே பேசப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக, 6 வருஷங்களாக இந்தத் துறையை நிர்வகித்து வருகிறவர் மாற்றப்பட்டால் நலமாக இருக்கும். இதுபற்றி அரசு கவனித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : 85 வயது, 90 வயது கிழவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டால், வேலையில்லாத பல ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலையை சர்க்கார் தடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 55 வயதானவர்களை கிழவர்கள் என்று சொன்னால், அது வயதானவர்களுக்கு ரொம்ப வருத்தம் தரும். அரசாங்கத் துறைகள் சிலவற்றில் 58, 60 வயது

ஓய்வு பெறும் வயதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையைப் பொறுத்தவரைக்கும் இவர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் பதவிப் பொறுப்பை வகிக்கிற அளவுக்கு இருக்கின்ற தன்மை உடையவர். 58 வயது வரைக்கும் இருப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

சோதனைச் சாவடிகள்.

* 151 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் உள்ள உணவு தானிய சோதனைச் சாவடிகளை அகற்ற அல்லது மாறுதல் செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஒரு மாவட்டத்திற்கென நிச்சயிக்கப்பட்டுள்ள கொள்முதல் இலக்கு முழுவதையும் எய்தியபிறகு அல்லது அதில் கணிசமான சதவீத அளவினை எய்தியபிறகு, அம் மாவட்டத்திற்குள் நெல் எடுத்துச் செல்வதற்கு உள்ள கட்டுப்பாடுகளை நீக்கிவிட வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதன் விளைவாக இந்த மாவட்டத்திற்குள் நிறுவப் பட்டுள்ள காவல் சாவடிகள் எடுத்துவிடப்படும். மேலும், ஒரு மாவட்டத்தி லிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்குள்ள கட்டுப் பாடுகள் தேவையானபோது ஓரளவுக்கு நீக்கிவிடலாமாயெனவும் அரசு ஆலோசித்து வருகிறது. அப்படிச் செய்தால் அதன் விளைவாக சில மாவட்டங்களில் தேவையற்றவையெனத் தெரியவரும் சில காவல் சாவடி கள் நீக்கப்படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : சோதனைச் சாவடிகளை நீக்குவதுபற்றி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு மிக விரிவாகப் பேசியிருக்கிற காரணத்தினால், மேலும் துணைக் கேள்விகள் வேண்டாம் என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Check-posts have not been . . .

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : இரண்டு நாட்களுக்கு முன்பு சோதனைச் சாவடிகள் எல்லா மாவட்டங்களிலும் நீக்கப்பட்டு விட்டன, வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் நீக்கப்படவில்லை என்ற நிலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நேரம் இல்லை.

THIRU K. VINAYAKAM : I challenge the statement of the Minister that the check-posts in the Chingleput district have been abolished. Still they are there.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : நான் உட்கார்ந்த பிற்பாடு பேசவேண்டும் என்ற முறையைப் பின்பற்றுவதற்கு திரு. வினாயகம் அவர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

THIRU K. VINAYAKAM : I do not think that I should learn anything fresh.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : எந்த விதமான பேச்சும் உட்கார்ந்து கொண்டே பேசவேண்டாம்.

திரு. கே. வினாயகம் : உட்கார்ந்து பேசக்கூடாது என்று சொல் கிறீர்கள், நின்றுகொண்டும் பேசக்கூடாது என்று சொல்கிறீர்கள். நான் என்னுடைய அபிப்பிராயத்தை எப்படிச் சொல்வது ?